# ஈரக்காற்று

ஆத்மார்த்தி

சித்திரன் எழுந்துகொண்டான். எதிரே திறந்திருந்த சன்னல் காற்றுக்கு ஆடியது. அதன் வழியே தெரிந்த வானம் அந்தக் காலத் திரைப்படங்களில் வருகிற திருடனைப் போலக் கரிய நிறம் பூசி இருந்தது. மெல்ல நடந்து பால்கனிக்கு வந்தான்.அது மூன்றாவது மாடி. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் பால்கனிகள்மிக அழகானவை.சிட் அவுட் என்ற அதன் பேருக்காகவாவது கொஞ்ச நேரம் விட்டேற்றியாக அமர்ந்துகொள்கிறவர்கள் பாக்கியவான்கள் பணக்காரத் தனமாய் இப்படியான அடுக்ககங்களில் வீடுவாங்குகிற பலரும்இரவுகளில் உறங்குவதற்காக மட்டுமே அங்கே வந்துசெல்கிறார்கள்.

ஸ்டீல் சேரில் அமர்ந்தான்.அன்றைய காலை பேப்பர் தரையில்வீழ்த்தப் பட்ட ஒரு பறவையைப் போலத் துடித்துக் கொண்டிருந்தது.இன்றைக்குக் காலை இதைப் படித்தோமா? என யோசித்தவன் சட்டென்று அதைக் கைவிட்டான்.அவ்வளவு உயரத்தில் இருந்து பார்க்கையில் வானம் அருகாமையிலும் தரை தூரப்பள்ளத்திலும் தெரிகிற தோற்றப் பிழையை ரசித்தான்.அமாவாசைக்கு அருகாமை தினமென்பதால் நட்சத்திரங்கள் எதுவும் தெரியவில்லை. உடனே 'ஒரு டார்ச் அடித்துப் பார்த்தால் என்ன?' என்று சித்திரனுக்கு தோன்றியது.

மழைக்கு முந்தைய கணத்தின் தூறல் கலந்த காற்று சில்லிட்டது.இதே போன்ற காற்றுத் தான் சித்திரனின் பால்யத்தில் இருந்து வீசிக்கொண்டிருக்கிறது. அது எல்லாரின் கவனத்தையும் ஒரு மழைக்கான "பிட் நோட்டீஸ்" போல ஈர்க்கும்.சித்திரன் சிறு பையனாக இருக்கையிலெல்லாம் இது போல ஈரக்காற்று வீசுகையில் அப்பா வீட்டுக்கு வந்து சேரவேண்டுமே என்று கவலைப் படுவான்.மழை வருவதற்கு முன்பாக அப்பா வந்து சேர்ந்துவிட்டால் சித்திரனுக்கு மனசு லேசாகும்.அன்று பெய்கிற மழையைக் கொண்டாடி விடுவான்.

அப்பா சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று ஒரு தினம் இறந்து போனார். சட்டென்று ஒருதினம் பேசிக் கொண்டிருக்கையிலேயே மின் தடையில் ஒரு விளக்கு அணைகிறாற் போல் அவர் காலமானது சரி என்றே சிலசமயம் தோன்றும். அவர் ஏதேனும் வியாதி வெக்கை என்று படுத்து அவருக்கு சேவகம் செய்து மெல்ல அவர் கண்மூடி இருக்கலாம் என்றும் தோன்றும்.ஒன்று நடந்தும் இன்னொன்று நடவாமலும் சித்திரனுக்குள் அவன் அப்பாவின் நினைவுகளை சமமாகப் பெயர்த்தபடி இருந்தன.

எல்லோருக்குமே அவரவர் அப்பாவைப் பிடிக்கத் தான் செய்யும்.சித்திரன் அம்மா இல்லாமல் வளர்ந்தவன்.அப்பா இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளவில்லை. ஒரு கேள்வியாக தன்னிடம் மறுமணம் குறித்துக் கேட்கப் படுகையிலெல்லாம் வெங்கடேசன், சித்திரனைக் காட்டி தப்பித்துக்கொள்வார். தன் பதினைந்தாவது வயதில் அப்பாவிடம் அந்தக் கேள்வியை முதல்முறை கேட்டது அவனுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது.

அன்றைக்கு தீபாவளி.மற்ற வீடுகளில் எல்லாம் அவன் வயசை ஒத்த சிறுவ சிறுமியர் வெடியும் மத்தாப்புமாக களேபரம் செய்து கொண்டிருந்தார்கள்.யாகப்பா நகர் மதுரையின் இதயத்தில் இருந்து சற்றே விலகி முதுகுப் புறம் புதிதாக முளைத்த கட்டி மாதிரியான பிரதேசம். முகவரி சொல்வதற்கு முன்னால் அந்த நகருக்கு முதலில் அடையாளம் சொல்ல வேண்டி இருந்தது. இப்போது சமீபத்தில் ஒரு பாலம் வந்து பல மதில்களைக் காணாமல் அடித்து விட்டிருக்கிறது, முன்பு அது இணைப்புப் பகுதி என்பதால் வீடுகள் ஒரு தெருவுக்கு இந்தப் புறம் பத்தும் அந்தப் புறம் எட்டுமாக தள்ளித் தள்ளித் தான் இருந்தன.

சித்திரன் அம்மா இறந்து போனது தீபாவளி அன்று என்பதால் சில வருடங்கள் அப்பா தீபாவளி கொண்டாடவில்லை,.பிறகு நாள்ப்பட மகனுக்காக துணியும் வெடியும்

வாங்கித் தரத்தான் செய்தார். பத்து வயதாகி ஓரளவு உலகம் புரிந்த குழந்தை அதனைத் தொட மறுத்தான். கடந்த நாலு வருடங்களாக சித்திரனும் அப்பாவும் மற்றுமொறு தினமாக தீபாவளியைக் கடந்து செல்லப் பழகி இருந்தார்கள்.மற்ற வீட்டுப் பிள்ளைகள் இரைச்சலும் உற்சாகமுமாக வெடித்ததைப் பார்த்துக் கொண்டிருந்த சித்திரன் சட்டென்று கேட்டான்.

"யப்பா..நீங்க ஏம்பா இன்னொரு கல்யாணம் செய்துக்கலை..?"

அப்படி ஒரு கேள்வி எப்போதாவது வந்தே தீரும் என்று தெரிந்தே இருந்த வெங்கடேசன் அந்த கணத்தின் நிஜத்தை சந்திக்க இயலாமல் திணறினார். எனினும் தன் உணர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் லேசாகப் புன்னகைத்தபடித் தன் வெள்ளெழுத்துக் கண்ணாடியை கழற்றி ஒரு ஊது ஊதி பனியனால் துடைத்தார்.அது சித்திரனுக்கு வேறொரு செய்தியை உணர்த்தும் சைகை. தனக்குப் பிடிக்காத எதைக் கேட்டாலும் உடனே கண்ணாடியைக் கழற்றி அதைத் துடைத்து 'கருமமே கண்ணாடியாக' அதன் எதாஸ்தானத்தில் அமர்த்தி பத்திரப் படுத்துவார். ஒரு பாடலின் பல்லவிக்கும் சரணத்திற்கும் இடையில் ஏற்படுகிற இசையிடை மௌனம் போல் அது நிகழும்.

வெங்கடேசன் மீண்டும் புன்னகைத்தார்.

"சித்திரா, நீ கைக்குழந்தையா இருந்திருந்தா அப்பா இன்னொருத்தியைக்கண்டிப்பா கூட்டிட்டு வந்திருப்பேன்.நீ வளர்ந்தும் வளராமையும் இருந்தியா..அதான் வேணாம்னு இருந்திட்டேன்.எனக்கு வேண்டியிருக் கலைப்பா.நீ எதையும் குழப்பிக்காதே."என்றார். சொல்லிவிட்டு அந்த விஷயத்தை அதற்கு மேல் வளர்த்த விரும்பாமல் கோட்ஸ்டாண்டில் தொங்கிக் கொண்டிருந்த தன் சட்டையை எடுத்தார். அதை உதறி அவசரமாக அணிந்துகொண்டு வேகவேகமாக கிளம்பிச் சென்றுவிட்டார்.அதன் பின் தீபாவளி தினம் முடியும் தருவாயில் தான் திரும்பினார்.டீவீ பார்த்தபடிக்கு சாப்பிட்டுக் கொண்டிருந்த சித்திரனைக் கடந்து சமையலறைக்குள் போனார்.ரெண்டு நிமிஷத்தில் ஒரு தட்டில் பொறித்த முட்டையைக் கொணர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவனின் தட்டில் இட்டார்.

அன்றைக்கு இரவு சித்திரன் தூங்குகையில் அவனைக் கட்டிக்கொண்டு "சித்திரா..இனிமே பேச வேணாம்பா இதைப் பத்தி.அப்பாகிட்டே பதிலில்லைடா"என்றார்.தன் கனவில் ஏதோ ஒரு சாலையில் அம்மாவைப் பார்க்கிறதற்காகக் அடுத்தடுத்த குதிரைகளில் அப்பாவோடே சென்று கொண்டிருந்த சித்திரனுக்கு அது கேட்கவில்லை.

கல்லூரி இரண்டாமாண்டு படிக்கையில் ஆங்காங்கே சித்திரனை சிகரெட்டும் கையுமாகப் பார்த்ததாக தன்னிடம் சொன்ன அக்கறையாளர்களிடம் சிரித்துக் கொண்டே"நான் கேட்டா அவன் பயந்து நிப்பாட்டலாம்.அல்லது பயப்படுறதையும் நிப்பாட்டலாம். நான் சொல்லக் கூடாதுங்க. பார்ப்போம். உங்களை மாதிரி பெரியவுங்க சொன்னா கேட்கலாம்"என்று திருப்புவார். அவனுக்கு விருப்பம் கம்ப்யூட்டரில் இருந்தது,வெங்கடேசனுக்குத் தன் மகன் சிவில் இஞ்சினியராக வரவேண்டும் என்று ஆசை.இருந்தாலும் அவனிடம் ஒருமுறைக்கு மேல் சொல்லவில்லை.கோவில்பட்டியில் ஒரு கல்லூரியில் அவன் கேட்ட பிரிவையே வாங்கிக்கொடுத்தார்."பிடிச்சதைப் படிக்கணும்... அப்போ தான் படிப்பு இனிக்கும்"என்று சிரித்தாரே ஒழிய பணம் செலவு என்றெல்லாம் கொஞ்சமும் யோசிக்கவில்லை.சித்திரன் சிறுவன் என்ற நிலையில் இருந்து வாலிபனாகிய பிறகு தனக்கு கிடைத்த தனிமைகளை மிகவும் விரும்பத் தொடங்கி இருந்தான். அப்பாவுக்கோ அவன் மீது ரொம்பவும் நம்பிக்கை இருந்தது. ஹாஸ்டலில் படிக்கிற பையன் என்று அவனுக்குக் கேட்டதை எல்லாம் கொடுத்தார். அது சித்திரனை மெல்ல வேறொருவனாக்கி இருந்தது. ஒரு நாள் முத்துவீரன் என்று சித்திரனுடன் படித்த பையனுக்கும் சித்திரனுக்கும் காலேஜில் முட்டிக்கொண்டு இரண்டு கோஷ்டிகள் மோதிக்கொண்டனர். கல்லூரி மைதானத்தில் பெரிய சண்டையாகி காலவரையின்றி மூடப்பட்டது.இப்படி ஒரு விஷயத்தையே முழுவதுமாக மறைத்து விட்டு மதுரைக்கு வந்து வீட்டில் இயல்பாக இருக்கலானான் சித்திரன். ஏரியா நண்பர்களோடு சினிமா டீக்கடை என்று பொழுது நன்றாகக் கழிந்தது. என்ன ஆகப் போகிறது என்ற மிதப்பில் இருந்தான் என்றே

சொல்லலாம்.பத்து நாள் கழித்துத் திறக்கப் பட்ட கல்லூரி நேராக முகத்தில் அடித்தாற் போல் சொல்லியது.

"முத்துவீரன்,சித்திரன் ரெண்டு பேரும் டிஸ்மிஸ்..நோ எக்ஸ்க்யூஸ்.."என்று. மெல்ல விழுங்கிக் கொண்டு அப்பாவிடம் சொன்னான் சித்திரன்.அப்போது தான் வேலையிலிருந்து திரும்பிய வெங்கடேசன் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டார். தன் மீது எந்தத் தவறும் இல்லை எனவும்,முத்துவீரன் தான் தன்னை வம்புக்கு இழுத்து அதன் பின் பெரிய சண்டையாகி விட்டதாகவும் எவ்வளவோ தன் நியாயங்களைக் கலந்து பிசைந்து சொன்னவனிடம் ஒரே கேள்வி தான் கேட்டார் வெங்கடேசன். "ஏம்பா...அந்த முத்துவீரன் எந்த ஏரியாப்பா?"என்று.மறு நாள் காலை நேராக சித்திரனை அழைத்துக் கொண்டு முத்துவீரன் வீட்டுக்கு சென்றார் வெங்கடேசன்.

மதுரை விமான நிலையம் செல்லும் வழியில் பெருங்குடி என்ற கிராமமும் நகரமும் கலந்த பிரதேசம்.முத்துவீரனின் வீடு மத்தியம வாழ்க்கைக்கு உண்டானதாகத் தோற்றமளித்தது. அவர்கள் சென்ற நேரம் முத்துவின் அப்பா இருளாண்டி வயலுக்கு சென்றிருந்தவர் அப்போது தான் வந்தார்.கூடவே முத்துவீரனும். அவன் லேசாகக் குழப்பமும் முறைப்புமாகப் பார்த்தான்.அவன் அப்பா இருவரையும் வீட்டிற்குள் அழைத்து அமரச்சொன்னார்.

முத்துவீரனின் அப்பாவுக்கு தன் வம்சத்திலேயே யாரும் படிக்காத பெரும்படிப்பை தன் மகன் படிக்கிறான் என்று பெருமை.அதில் மண்ணள்ளிப் போடுகிற விதமாக அவன் சீட்டுக் கிழிந்த விபரத்தை எப்படி விழுங்குவதென்று தெரியாமல் வாயில் தின்பண்டத்துடன் அலைகிற குழந்தை போல விழித்தார்.

"இங்கே பாருங்க இருளாண்டி...நீங்க என் கூட வாங்க.ப்ரின்சிபாலைப் பார்ப்போம் ஒத்துக்கலைன்னா...எம்பையனுக்கு மட்டும் டீசீ வாங்கிக்குறேன்.முத்துவீரன் படிக்கணும்." சித்திரனுக்கு "இதென்னடா ஊரே ஒரு புறம் ஒதுங்கினால் என் தகப்பன் மட்டும் வேறு புறம் ஒதுங்குவான் போல.."என்று புரியாமல் பார்த்தான்.பிரின்சிபாலை பார்க்க சித்திரன் முத்துவீரன் இருவரின் பேரண்ட்சும் வந்திருக்கிறார்கள் என்று சொல்லப் பட்டதும் ஒரு மணி நேரம் காக்க வைத்த பிறகு கடுகடு முகத்தோடு உள்ளே அனுமதிக்கப் பட்டார்கள். எடுத்த எடுப்பிலேயே பிரின்சிபால் சொன்னார்.

"எப்போ டீசீ வாங்கிக்குறீங்க..?: அடுத்த கால்மணி நேரம் பொறுமையாக பேசி கெஞ்சி கொஞ்சி ஏற்றி இறக்கி தன் வார்த்தை ஆயுதங்களை எல்லாம் தீர்த்த பின்னும் அரைமனசாக மண்டையை மண்டையை ஆட்டிய பிரின்சிபாலை என்ன செய்வது என்று தெரியாத வெங்கடேசன் மெல்லத் திரும்பி இருளாண்டியிடம் "நீங்க என்ன சொல்றீங்க இருளாண்டி?"என்றார். இருளாண்டி தன் தோளில் இருந்த டர்க்கி டவலை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.லேசாகச் செருமியபடி "வாத்தியாரய்யா, நீங்க பெரும்படிப்பு படிச்சவுக.நான் படிக்காதவன். நாங்கல்லாம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவுக.நாங்க உயரணும்னு அரசாங்கம் இப்பத் தான் அங்கயும் இங்கயுமா லேசுலேசா எங்களுக்கும் நல்லது செய்ய ஆரம்பிச்சிருக்குது. இதுல எங்க குடும்பத்துல முத்துவீரன் தான் மொத படிப்பாளி.முந்தியே பெயிலாப் போயிருந்தாம்னா வயல்ல போட்டிருப்பேன். இல்லைனா கூலி வேலைக்கு அனுப்பிருப்பேன். ஆனா நல்லா படிச்சாம்னு தான் காலேசுக்கு வந்து சேர்த்துருக்கேன்.இப்பப் பாதில நிப்பாட்டிட்டா போக்கிடம் இல்லீங்க.மறுபடி படிக்கச் செல்லாம வேலைக்கும் ஆகாம அவன் கெட்டுட்டான்னா என் குடும்பம் தாங்காதுங்க.."

தான் பேசியது சரிதானா என்ற எண்ணத்தில் லேசாகத் தயங்கி ஒரு இடைவெளி விட்ட இருளாண்டி "அய்யா,தப்புத்தான்.சண்டை போடக் கூடாது.ரெண்டு பசங்க அடிச்சிக்கிட்டது காலேசுக்குள்ளேன்னா அதுக்கு ஒரு அர்த்தம்.இதையே வெளியே அடிச்சிக்கிட்டா வேற அர்த்தம்ங்க.இதை வளக்க கூடாது.முடிச்சி வெசிறணம். இப்ப ரெண்டு பேரையும் மன்னிச்சிட்டீங்கன்னா பேசாமத் தன் வேலையைப் பாத்து போயிக்கிடுவானுங்க. மாறி தண்டிச்சீயன்னா,"

இப்போது தான் பேசுவது சரிதான் என்று தன் மீதே நம்பிக்கை வந்த இருளாண்டி "வாத்தியாரய்யா...மொத மொத செய்யுற தப்பு அதத் தண்டிக்கிறதுக்கு ஒரே வழிதாங்கய்யா.

அதை மன்னிச்சுரோணம்.மன்னிச்சுட்டா அது மறைஞ்சு வத்தி காணாமப் போயிறும்.வேற எது செஞ்சாலும் அது சீழ் வெச்சு ரணமாயிருங்கய்யா..ஆறவே ஆறாது. உங்களுக்குத் தெரியாதது இல்லீங்க..பார்த்து செய்யுங்க."

அவ்வளவு தான்.இருளாண்டியின் முகத்தையே உற்றுப் பார்த்த பிரின்சிபால் லேசாகச் சிரித்து "சரி..இது லாஸ்ட் வார்னிங்க்..இனி எங்கிட்டே எந்த சிபாரிசுக்கும் வரக்கூடாது.

ஒழுங்கா படிக்க சொல்லுங்க..''; என்றார்.

நன்றி சொல்லி விட்டு வெளியே வந்த வெங்கடேசன் இருளாண்டியிடம் "ரொம்ப நன்றிண்ணே.."என்றவர் சித்திரனிடம்"தம்பி.. முத்துவீரண்ட்ட மன்னிப்புக் கேளுப்பா.."என்றார். அதை எதிர்பார்க்காமல் உதடுகளில் இருந்து "மன்னிச்சுடு முத்து "என்ற சித்திரனிடம் "என்ன தம்பி மன்னிப்பெல்லாம் கேட்டுக்கிட்டு.மன்னிப்புங்குறது வெறும் வார்த்தை.அது கடைசி வரைக்கும் வார்த்தையா மட்டுந்தான் இருக்கும்.மறக்கிறது தான் சரி.மறந்துருங்க.படிப்பப் பாருங்க"என்ற இருளாண்டி முத்துவீரனைக் கூட்டிக்கொண்டு மெல்ல நடந்து மறைந்தார்.

அங்கேயே சற்று நேரம் நின்றுகொண்டிருந்த சித்திரனின் தோளைத் தட்டினார் வெங்கடேசன். "ஏம்பா...உங்கம்மா இருந்திருந்தா நீ இன்னும் சரியா இருந்திருப்பேல்ல..?"என்றார்.

அதிர்ந்த சித்திரன் அதன் பின் மௌனத்தில் ஆழ்ந்தான். சற்றேறக் குறைய மூன்று நான்கு மாதங்கள் யாரிடமும் பேசாமல் தானுண்டு தன் வேலை உண்டு என்று இருந்தான். சிகரெட்டை சுத்தமாக நிறுத்தினான். வெளியே அனாவசியமாக எங்கேயும் செல்வதில்லை. எதாவது புத்தகம் இல்லாவிட்டால் இசை என்றிருந்தான். அப்பாவிடமும் கூட 'கேட்ட கேள்விக்கு பதில்' என்ற அளவில் இருந்தான். அதற்கு முன்பும் பின்புமாக அவன் வாழ்க்கை ரெண்டாக மாறிவிட்டிருந்தது.கல்லூரிப் படிப்பை முடித்து சென்னையில் வேலை கிடைத்து ஒரு மேன்ஷனில் தங்கினவனுக்குப் புதிய நண்பர்கள் கோபி என்று நாகர்கோயில் பையன் ஒருவனும் ஜேனி என்பவனும் நெருக்கமானார்கள்.

மாசாமாசம் அப்பாவோடு கடைசி வார சனி ஞாயிறு மட்டும் மதுரைக்கு சென்று தங்குவான்.அவனது தனி உலகத்திற்குள் எத்தனை அழைத்தாலும் வரமறுத்துவிட்டார் வெங்கடேசன்.சித்திரனுடைய கம்பெனியிலேயே விழுப்புரத்தில் இன்னொரு அசைன்மெண்டில் முத்துவீரனும் சேர்ந்திருந்தான்.ரெண்டு பேரும் சில ட்ரெய்னிங்குகளை ஒன்றாகக் கலந்துகொள்ள வேண்டி வந்தது,முதலில் சற்று விறைப்பாக இருந்து பார்த்தனர்.பிறகு மனசு கேட்காமல் ரெண்டு பேருமே பழையவற்றுக்கு வெட்கினர்.மன்னிப்புக் கோரினர்.மன்னித்துக் கொண்டனர். சிரித்துக் கலந்தனர்.

ரெண்டு வருஷங்கள் வாழ்ந்தவனுக்கு சென்னை மிகவும் செட் ஆகி விட்டிருந்தது.அது கடைசி வார வெள்ளி என்பதால் ஊருக்குக் கிளம்ப எத்தனித்துக் கொண்டிருந்தவன் செல்பேசியில் வெங்கடேசனின் அழைப்பு வந்தது.

"என்னப்பா...திடீர்னு போன் பண்றீங்க..?'என்றவனிடம் சிரித்தவாறே," சித்திரா,உனக்கு பொண்ணு பாக்கலாம்னு இருக்கேன்.என்னா சொல்றே?"என்றார் அப்பா.

"யப்பா...நாளைக்கு காலையில ஊருக்கு வந்திருவேன்.நேர்ல பேசிக்குவோம்." என்றான். மறுதினம் காலை ஆறுமணிக்கெல்லாம் டாண் என்று பெரியார் பேருந்துநிலையத்தில்இறங்கி ஆட்டோ பிடித்து வீட்டுக்கு போனவனை வாசலில் இருந்தே வரவேற்றார் அப்பா.

"ஏம்பா இங்கேயே நிக்குறீங்க..?:"என்றவனிடம் "நீ வர்றேல்லப்பா.. தினமுமா நிக்கப் போறேன்.?என்றவர் காஃபி கலந்து அவனிடம் கொடுத்தார். குடித்துக் கொண்டிருக்கையிலேயே "சென்னையில ஒரு வீடு வாங்கணும்னா எவ்ளோ ஆகும்பா..?"ஆர்வமாகக் கேட்டவரிடம் "யப்பா...ஊருக்குள்ளே நினைச்சே பாக்க முடியாது,மதுரவாயல் பெருங்களத்தூர் இப்பிடி சென்னையோட அட் ஜாயிண்ட்ல வேணா டிரை பண்ணலாம்..அம்பது ரூபாய்க்கு நல்ல வீடா வாங்கலாம்."என்றான்

"சரிப்பா...அப்பா இந்த வீட்டைக் குடுத்துறலாம்னு பாக்குரேன்.என் சேவிங்க்ஸ் இருக்கு...சென்னையில ஒரு வீட்டை வாங்கிடுவோம். அப்பார்ட்மெண்ட் டைப்பா பாருப்பா.."என்றவர் அன்றைக்கு மதியம் வரை சித்திரனின் கல்யாணம் எப்படி நடக்க வேண்டும்.பெரிய குடும்பத்தில் கடைக்குட்டி

பெண்ணாக நிறைய மைத்துனன் மார் இருக்கக் கூடிய சூழலில் சித்திரனுக்குப் பெண் தேடிக் கொண்டிருப்பதாக எல்லாம் சொல்லிவிட்டு "கொஞ்ச நேரம் கண் அசர்றேம்பா..;" என்றார்.

ஏழுமணியாகியும் தூங்குகிறாரே என்று உசுப்பிய சித்திரனுக்கு அப்பா இறந்துவிட்டார் என்பது முதலில் உறைக்கவே இல்லை."ஏன் நம்மை இப்படி படுத்துகிறார்?" என்று தான் தோன்றியது.சிலமுறை அழைத்துப் பார்த்துத் தோற்றபிறகு தான் அந்த நிஜத்தின் கொடூரம் புரிந்தது.சித்திரன் அழவே இல்லை.அவன் ஏற்கனவே எதன்பொருட்டோ அமைதியாகி இருந்தவன்,தன் தந்தையின் மரணத்தை மிகமிக மெல்ல விழுங்கிக் கொண்டான். என்ன செய்வது எப்படித் துவங்குவது என்றே தெரியவில்லை.ஒரு மரணத்தை சந்திக்கையில் சக மனிதர்களின் இருப்பு மிகவும் முக்கியமானதாகிறது,ஒருவருக்கொருவர் என்று இந்த உலகில் வாழ்கிற எல்லோருக்கும் அந்த முதல்நபர் இறக்கையிலேயே இரண்டாமவர் பாதியிலும் பாதியாக சிதைந்துவிடுவது நேர்கிறது.சித்திரன் அத்தனை நெருக்கமாக பார்க்கிற முதல் மரணம் அது.என்ன செய்வது என்று சற்று நேரம் யோசித்தவன் மெல்ல முகம் கழுவினான்.ஏதோ ஒரு திரைப்படத்தில் பார்த்த ஞாபகத்தில் ஊதுபத்தி நாலைந்தை ஏற்றிவைத்தான். ஒரு பேப்பரை எடுத்துக் கொண்டு செய்யவேண்டியவை எனத் தலைப்பிட்டு வரிசையாக எழுதலானான். எதிர்வீட்டுக் கதவைத் தட்டினான். ஜோன்ஸ் அங்கிள் கதவைத் திறந்தார்.அவரிடம் விஷயத்தை சொன்னதும் அதிர்ந்தவர் உடனே சுதாரித்து தன் மனைவி ஸ்டெல்லாவை அழைத்துக் கொண்டு தன் வீட்டைப் பூட்டி விட்டு சித்திரனோடு வந்தார்.அவனிடம் கேட்டு ஃபோன் நம்பர்களை பெற்றுக்கொண்டு ஒவ்வொருவருக்காய் தகவல் சொல்ல ஆரம்பித்தார்.மறுநாள் மின்மயானத்தில் வெங்கடேசனை திருப்தியாக வழியனுப்பி வைத்துவிட்டு வந்தபிறகு வந்திருந்த சொந்தக்காரர்கள் எல்லாரும் கிளம்பும் வரை ஒன்றும் தெரியவில்லை. எல்லாரும் சென்றபிறகு தனியே இருக்க நேர்கையில் தான் கதறி அழலானான் சித்திரன். விழுப்புரத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்ததால் அப்போது தான் வந்து சேர்ந்த முத்துவீரனும் ஜேனியும் அன்றைக்கு இரவு முழுக்க சித்திரனுடன் தங்கி அவனை தேற்றினார்கள்.

அடுத்த சிலமாதங்களில் அப்பா இல்லாமற்போன வீட்டை விற்றுவிட்டு சென்னையில் அவர் ஆசைப்படியே ஒரு அபார்ட்மெண்டில் வீட்டை வாங்கினான் சித்திரன். சென்னையின் பரபரப்பும் தனிமையும் அவனை இன்னொருவனாக ஆக்கிக்கொண்டிருந்தன.அவ்வப்பொழுது அப்பா ஒரு ஈரக்காற்றைப் பற்றிக்கொண்டு அவன் நினைவுகளில் வந்து வந்து சென்றுகொண்டிருக்கிறார்.அப்பா இருந்து பார்த்திருக்க வேண்டிய தன் வாழ்க்கைத் துணையை அவர் ஆசைப்பட்டாற் போலவே பெரிய்ய குடும்பத்தின் கடைக்குட்டி தேவதையாக ஒருத்தியை தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை ஒரு வேதவாக்காகக் கொண்டு தேடினான். ஒன்றுக்கு மேற்பட்ட தரகர்கள் இவனுக்காகப் பெண் பார்த்துக்கொண்டே இருந்தனர். இன்றைக்குக் கூட தரகர் பாலுச்சாமி சாயங்காலம் சொன்னார்."தம்பி,ரொம்ப நல்ல வரன்லாம் வருதுங்க. இன்னிக்குக் கூட ஒரு பொண்ணு. ஆனா குடும்பம் சின்னது. அது ஒத்தைப் பொண்ணு.." என இழுத்தார்.

வழக்கமாக இந்தக் கேள்விக்கு "வேண்டாங்க" என்று மறுத்துவிடும் சித்திரன் என்னவோ அவன் அருகே அப்பா நின்றுகொண்டு இருப்பதைப் போல உணர்ந்தான்."சரிங்க.. பாக்குறேன்."என்றவனிடம் நம்ப முடியாத சந்தோ ஷத்துடன் பாலுச்சாமி "அப்டியா தம்பி..உங்க நம்பர் குடுத்து பேசச்சொல்றேன்.. மத்த விசயங்களை கலந்துக்குங்க.."என்று வைத்தார். அப்பாவின் நினைவுகளில் தொடங்கி எங்கெங்கேயோ பயணித்து விட்டு மீண்டும் சித்திரன் தன் சிட் அவுட் தனிமையை உணரும் வண்ணம் திடீரென்று சடசடவென்று மழைவலுக்க ஆரம்பித்தது. உடனே அறைக்குள் வந்து சிட்அவுட் கதவைத் தாழிட்ட சித்திரன் தன் செல்போன் ஒலிக்கிறதை எடுத்தான். மணி பார்த்தான்.எட்டரை மணி.அழைப்பது யாரென்று தெரியவில்லை.அழுத்தினான். "ஹலோ...மிஸ்டர் சித்திரன்..?"என்றாள் எதிர்முனையாள்.

"சொல்லுங்க...சித்திரன் தான் பேசுறேன்."

"என் பேர் வந்தனா.நான் ஹெச்.சி.எல்லே வேலை பாக்குறேன்.மேட்ரிமோனில உங்க

விளம்பரம் பார்த்தேன்.அது சம்மந்தமா பேசத் தான் கூப்டேன்."

"சொல்லுங்க.."என்றான் அந்தக்குரலை தன் மனசில் பதிந்துகொண்டே.

"உங்களை சந்திக்கலாமா..? நாளைக்கு.." என்றவளிடம்

"உங்க ஃபேமிலி பற்றி கொஞ்சம் சொல்லுங்க வந்தனா.."

"என் கூடப் பொறந்தவங்க யாருமே இல்லை. நான் ஒரே பொண்ணு.என் ஃபோட்டோ டீடெய்ல்ஸ் எல்லாம் உங்க மெயில்க்கு அனுப்பிச்சிருக்கேன்."என்றாள். உடனே திறந்து வைத்திருந்த லேப்டாப்பில் அவள் அனுப்பிய மெயிலை ஓப்பன் செய்தான்.புகைப்படம் டவுன்லோட் ஆகத் தொடங்கியது.

இவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.ஒரே பெண்ணா..?நான் குடும்பம் என்றெதுவுமற்ற ஒரே ஒருவன்.ஒன் பிளஸ் ஒன் எப்படி ஒத்துவரும்...?தன் மனதில் இருந்த ஆசையை எப்படி இவளிடம் வலிக்காமல் சொல்லி நிராகரிக்க என்று யோசித்தான். இன்னமும் ஃபோட்டோ பதிவிறக்கம் ஆகிவிட்டிருக்கவில்லை.

"அப்பா என்ன செய்றாரு..?".

அவள் குரல் மறுமுனையில் மைக்ரோ நடனங்களில் ஆடி அடங்குவதை உணரமுடிந்தது.குரல் சன்னமாக ஒலித்தது.



ஓவியம்: ரோஷனி கோபால்ராவ் இங்காலே

"அப்பா டீவீஎஸ்ல இருந்தார்..எட்டு மாசம் முன்னாடி ஹார்ட் அட்டாக்ல இறந்துட்டார்.."

டவுன்லோட் ஆகி முடிந்த புகைப்படத்தில் தன் தகப்பனின் கழுத்தில் கைகளை மாலையாகக் கோர்த்தபடி சிரித்துக் கொண்டிருந்தாள் "வந்தனா...நாளைக்கு சந்திக்கலாம்.எனக்கு ஓக்கே தான்..உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருந்தா நாம கல்யாணம் செய்துக்கலாம்.

புகைப்படத்தில் வந்தனாவின் அப்பா மிகவும் பரிச்சயமான ஒருவரைப் போலத் தோன்றினார். சன்னலிலிருந்து ஈரக்காற்று முகத்தை அலம்பியது.

தன் அப்பாவோடு தானும் இப்படி ஒரு ஃபோட்டோ எடுத்துக்கொண்டிருக்கலாம். வந்தனாவின் மீது தன் பார்வையை செலுத்தியவன், "நாளைக்கு சந்திப்போம். குட் நைட்" என்று ஃபோனை வைத்தான்.

■

---

# மாநகரப் பேருந்து எனும் புதிர்

**வீ. விஜய ராகவன்**

**புதிர் ஒன்று**

எழுபத்துக்கு மேலாயினும்
எந்தப் பேருந்திலும்
என்றுமே ஆக்கிரமிப்பில்
எனக்கான இருக்கை.

ஏறும் படிகள் மட்டுமல்ல
எழுத்தறிவும், பரிவும் கூட
எட்டாத பேருந்து.

**புதிர் இரண்டு**

நாணயமே இல்லை
என்று சொல்லிவிட முடியாது
நம்மிடையே.



பார்க்கவும் கேட்கவும் முடிகிறது
பேருந்துகளில்
பயணச் சீட்டு கேட்டு
நடத்துனரை விளித்து, விளித்து
நைந்து போன
குரலும், ஈடான சட்டையும்.

பார்க்கவும் கேட்கவும் முடிகிறது
நகர முடியாத நெரிசலிலும்
உரிய இடம் நோக்கிப்
பயணச் சீட்டும் மீதிப் பணமும்
கைமாறிச் செல்லும் கடமையில்
முன்பின் அறியாத
முகங்கள், கைகளின்
பொறுப்பும், புரிதலும்.

பார்க்கவும் கேட்கவும் முடிகிறது
வேற்று முகமின்றி விரியும்
பல பல கதைகளை
செழிப்பும், சிதைவும் கலந்து
பகிர்வதில் தயக்கமின்றி.

பார்க்கவும் கேட்கவும் முடிகிறது
ஏறும் போது இருந்த
பதற்றமும் சீற்றமும்
இறங்கும் போது
தவறாமல் மீள்வதை.

இடையே வாய்க்கும்
மணித்துளிகள்
மானுடம் துளிர் விடும்
தருணங்களாய்
ஒவ்வொரு பயணமும்.

■